ඉඩම් මැනුම් සභාව

நில அளவைச்சபை

Land Survey Council

# 2013

# වාර්ෂික වාර්තාව

# ஆண்டறிக்கை

# ANNUAL REPORT

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தலைவரின் செய்தி | 03 |
| 2. | தொலைநோக்கும், செயற்பணி | 04 |
| 3. | நில அளவைச் சபையின் செயற்பாடுகள் | 05 |
| 4. | நில அளவைச் சபையின் அதிகாரங்கள் | 06 |
| 5. | 2013 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கான நில அளவைச் சபையின் செயலாற்று அறிக்கை | 07 |
| 6. | சபை ஊழியர்கள் | 08 |
| 7. | செயற்பாடுகள் | 08 |
| 8. | கல்வியும், பயிற்சியும் | 11 |
| 9. | நிதி நடவடிக்கைகள் பற்றிய மீளாய்வு | 13 |
| 10. | நிதியும், நிதி முகாமைத்துவமும் | 13 |
| 11. | 2013 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள் | 14 |
| | i நிதி நிலைமை அறிக்கை | 15 |
| | ii நிதிச் செயல்திறன் அறிக்கை | 16 |
| | iii தேறிய சொத்துகள் / மூலதனமாற்றங்களுக்கான கூற்று | 17 |
| | iv காசுப் பாய்ச்சல் கூற்று | 18 |
| | v 2013 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டின் கணக்குக் குறிப்புக்கள் | 19 |
| | vi 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள் | 22 |
| 12. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 23 |

# 01. தலைவரின் செய்தி

நிலஅளவைச் சபை
நிலஅளவையாளர் நாயக அலுவலகம்
கிருல வீதி, நாரஹேன்பிட்ட
கொழும்பு – 05

06 ஜவூன் 2014

ஒரு போட்டித் தன்மைமிக்க வர்த்தக உலகில் தரம் வாய்ந்ததும் தொழில் நிபுணத்துவமுடையதுமான அளவைச் சேவைகளில் கவனம் செலுத்துகின்ற தொழில் நிபுணத்துவமுடைய சு'ழலை வலுப்படுத்தும் உன்னத நோக்கத்தினை மையமாகக்கொண்டு, 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நில அளவைச் சபை வெற்றிகரமாக செயற்பட்டு ஆற்றிய தொழிற்பாடுகளை முன்னிட்டு நான் மிகவும் திருப்தியடைகின்றேன்.

2002 ஆம் ஆண்டின் நில அளவைச் சட்டம் இல.17 ன் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நில அளவைச் சபையின் பிரதானமான தொழிற்பாடுகளாக, நில அளவையாளர்களை பதிவு செய்தல், பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களுக்கு வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப் பத்திரம் வழங்குதல், பொது மக்களின் நலன் கருதி நில அளவையாளர்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொடுத்தல், நில அளவையாளர்களின் தொழில்சார் ஒழுக்கத்தினை பராமரித்தல், நில அளவைச் சபைக்கு பொது மக்களால் நில அளவையாளர்களுக்கு எதிராக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளை பரீட்சித்தல் மற்றும் நில அளவையாளர்களுக்கான தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு (CPD) பாடநெறிகளை நடாத்துதல் என்பனவாகும்.

நில அளவைச் சபை 2013 ஆம் ஆண்டிற்காக பதிவு செய்த நில அளவையாளர்கள் 1077 நபர்களுக்கு வருடாந்த அளவை அனுமதிப் பத்திரத்தினைப் வழங்கியுள்ளது. மேலும் பதிவு செய்யப்பட்ட அனுமதிப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்களுக்கு எதிராக பொது மக்களினால் மற்றும் இதர நிறுவனங்களினாலும் சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ள தொழில்சார் முறைகேடுகள் தொடர்பான முறைப்பாடுகளுக்காக 36 விசாரணைகள் 2013 ஆண்டுக் காலப்பகுதியில் சபை மூலம் நடாத்தப்பட்டு பு'ர்த்தி செய்யப்பட்டுள்ளன.

2013 ஆம் ஆண்டிலும் பதிவு செய்த நில அளவையாளர்கள் மத்தியில் தொழில்சார் ஒழுக்கத்தினை பராமரித்தல் மற்றும் அவர்களுடைய தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாடு தொடர்பாக நில அளவைச் சபை மிக ஆழ்ந்த கவனம் செலுத்தியதுடன் 2013 ஆண்டில் காணி அளவைகள் களம் தொடர்பான தொழில்சார் மேம்பாட்டு பாடநெறி 11 இனை பதிவு செய்யப்பட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்களுக்காக நில அளவைச் சபையின் அனுமதியுடன் நடாத்தப்பட்டது. பதிவு செய்யப்பட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்களினால் தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பாடநெறியில (CPD) கலந்துகொள்வதற்கு காட்டப்படும் ஆர்வம் பாரட்டத்தக்கதும் குறிப்பிடத்தக்க கூடியதுமான ஓர் அம்சமாகத் திகழ்கிறது.

நிலஅளவைச் சபை மீளாய்வு ஆண்டுக்காலப் பகுதியில் சிறப்பாகவும் திறம்படவும் சேவையாற்றுவதற்கு ஒத்தாசையாக இருந்த சபை உறுப்பினர்கள், பதில் செயலாளர் மற்றும் நிலஅளவைச் சபை அலுவலர்கள் ஆகிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பி.எம்..பி. உதயகாந்த
தலைவர் / நிலஅளவைச் சபை

## 02. தொலைநோக்கும் செயற்பணியும்

### தொலைநோக்கு

“போட்டிமிக்க வர்த்தக உலகில் தரம் வாய்ந்ததும், தொழில் நிபுணத்துவமுடையதுமான அளவைச் சேவைகளில் கவனம் செலுத்துகின்ற தொழில் நிபுணத்துவமிக்க சூழலைப் பலப்படுத்துவதனூடாக நில அளவீட்டுக்கான ஒழுங்கு முறையான கட்டுமான முழுமை ஒன்றைப் பேணுவதன் மூலம் தேசிய அபிவிருத்திக்கான எமது பௌதீக இயற்கை வளங்களின் உச்சமட்ட நிலையான பயன்பாட்டினை உறுதிப்படுத்துவதே எமது தொலை நோக்காகும்.”

### செயற்பணி

“அளவைத் தொழில் மற்றும் அதன் செயன்முறைகள் சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன என்பதையும், அவை தொழிற்துறையில் எதிர்பார்க்கப்பட்ட தொழில்நுட்பத் தேவைப்பாடுகள் மற்றும் ஒழுக்க நியமங்களுக்கு ஏற்றவாறான கல்வி மற்றும் பயிற்சி என்பவற்றைப் பெற்று அவற்றைத் தொழிலில் பிரயோகிப்பதனூடாக அளவைத் தொழிலை மேற்கொள்பவர்கள் தொழல்சார் நடவடிக்கைகளில் உயர்தர நியமங்களைப் பேணுவதனையும் உறுதி செய்வதே எமது செயற்பணியாகும்.”

## 03. 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் பிரிவு 37 இல் உள்ளவாறு நில அளவைச் சபையின் செயற்பாடுகள்

2002 ஆம் ஆண்டின் நில அளவைச் சட்டம் இல.17 ன் கீழ் நில அளவைச் சபையானது நில அளவையாளர் நாயக அலுவலகம் (முதலாம் மாடி), இல.150, கிருல வீதி, கொழும்புஉ5 இல் தாபிக்கப்பட்டது.

நில அளவைச் சட்டம் இல.17 பிரிவு 37 ல் கொடுக்கப்பட்டுள்ள நில அளவைச் சபையின் தொழிற்பாடுகள் பின்வருமாறு:உ

அ. காணி அளவை தொடர்பான நியமங்களையும், நடைமுறை விதிகளையும் பேணுவதுடன் காணி அளவைத் தொழிலை மேற்கொள்பவர்கள் மத்தியில் தொழில்சார் ஒழுக்காற்றையும் பேணுதல்.

ஆ. நிலஅளவையாளர்களிடமிருந்து அவர்களைப் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களாகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைப் பெறுவதுடன் அத்தகைய நில அளவையாளர்கள் விதிந்துரைக்கப்பட்ட தகைமைகளையும், அனுபவங்களையும் கொண்டுள்ளார்கள் என்றும், நிலஅளவைத் தொழிலில் ஈடுபடுவதற்கான ஆற்றல், அறிவு என்பவற்றைக் கொண்டுள்ளார்கள் என்றும் சபை திருப்தியடையும் இடத்து அவர்களுக்கான பதிவை மேற்கொள்ளுதல்.

இ. தொழிலில் ஈடுபடுவதற்கான வருடாந்த உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்காகப் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெறுவதுடன் அத்தகைய நில அளவையாளர்கள் நில அளவைத் தொழிலில் ஈடுபடுவதற்கான அறிவு, ஆற்றல் என்பனவற்றைக் கொண்டுள்ளார்கள் என்று சபை திருப்தியடையும் பட்சத்தில் அவர்களுக்கு உத்தரவுப் பத்திரம் வழங்குதல்.

ஈ. நிலஅளவைத் தொழிலில் ஈடுபடும் நிலஅளவையாளர்கள் மத்தியில் உயர் தொழில்சார் கல்வித் தரங்கள் பேணப்படுவதை மேம்படுத்தல்.

உ. நிலஅளவைத் தொழிலில் ஈடுபடும் நில அளவையாளர்கள் மற்றும் வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப் பத்திரத்தைப் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களின் அறிவு, ஆற்றல்களை விருத்தி செய்வதன் ஊடாக தொழில்சார் வளர்ச்சிக்காக வழங்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களை அதிகரித்தல்.

ஊ. நிலஅளவைத் துறையில் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை அங்கீகரித்தல், செயன்முறை அனுபவத் தேவைப்பாடுகளை நிர்ணயம் செய்தல் மற்றும் நில அளவையாளர்களைப் பதிவு செய்வதற்காகவும், அவர்களுக்கு வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்குமான தகைமைப் பரீட்சைகள் மற்றும் தொழில்சார் நேர்முகப் பரீட்சைகள் போன்றவற்றை நடத்துதல்.

எ. நில அளவைத் தொழிலில் ஈடுபடும் நில அளவையாளர்களின் கல்வி – பயிற்சி மற்றும் அங்கீகாரம் என்பவற்றில் சீரானதும் பரஸ்பரமானதொரு தன்மையை பேணும் நோக்கத்திற்காக வெளிநாடுகளில் உள்ள சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து பரஸ்பர ஏற்பாடுகளை மேற்கொள்ளுவதும், கலந்துரையாடல்களில் ஈடுபடுவதும்.

ஏ. அளவைத் துறையில் வேண்டப்பட்ட கல்வித் தரங்களைப் பேணும் நோக்குடன் இலங்கையில் காணி அளவை மற்றும் காணித் தகவல் தொடர்பான கல்வி, பயிற்சி நெறிகளை மேற்கொள்ளும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படல்.

ஐ. அளவைத் துறையில் உயர் தொழில்சார் தரங்களைப் பேணும் நோக்குடன் இலங்கையின் ஏனைய தொடர்புடைய அமைப்புக்களுடன் ஒருங்கிணைந்து செயற்படல்.

## 04. நில அளவைச் சபையின் அதிகாரங்கள்.

அ. நிலஅளவைச் சபைக்கான ஏதேனும் அசைவுள்ள மற்றும் அசைவற்ற சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் அவற்றை பெறுவதற்கு அல்லது வழங்குவதற்கு, ஈடுவைப்பதற்கு, அடகு வைப்பதற்கு, விற்பனை செய்வதற்கு அல்லது அவற்றை வேறு ஏதேனும வகையில் அகற்றுவதற்கும்.

ஆ. சபையானது காசாகவோ அல்லது வேறு வகையிலோ வரப்பிரசாதங்கள், கொடைகள் அல்லது அன்பளிப்புக்கள் போன்றவற்றை ஏற்றுக்கொள்வதற்கும், தனது தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக அவற்றிற்கு விண்ணப்பிப்பதற்கும்;

இ. சபை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவசியமாக இருக்கக் கூடியவாறான அலுவலர்களையும், ஊழியர்களையும் நியமனம் செய்வதற்கு

ஈ. அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பள விபரங்களை தீர்மானிப்பதற்கும்.

உ. சபையின் செயற்பாடுகளை வினைத் திறமையுடன் நிறைவேற்றுவதற்கான செயற்குழுக்களை நியமித்தல்

ஊ. சபையின் அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை ஏற்படுத்துதல் மற்றும் சேமநலன்கள், பொழுது போக்கு வசதிகளை வழங்குதல்.

எ. சபையின் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான விதிப் பிரமாணங்களை நிர்ணயித்தல்.

ஏ. பொதுவாக சபையின் செயற்பாடுகளை நேர்த்தியாக மேற்கொள்வதற்கு ஏதுவாக அமையக் கூடிய அவ்வாறான ஏனைய அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளுதல்.

## 05. 2013 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கான நில அளவைச் சபையின் செயலாற்று அறிக்கை

**2013 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிலஅளவைச் சபையின் உறுப்பினா்கள் வருமாறு**

| | | |
|---|---|---|
| 1. | கலாநிதி கே. தவலிங்கம் | உ தலைவா் |
| 2. | திரு. நிஹால் குணவா்தன | உ உபதலைவா் |
| 3. | திரு. எஸ்.டி.பி.ஜே தாம்பேகம | உ உறுப்பினா் |
| 4. | திரு. கே.ஆர்.எம்.யு. பண்டார | உ உறுப்பினா் |
| 5. | திரு. சீ.டீ.எஸ். குணதிலக | உ உறுப்பினா் |
| 6. | திரு. கே.ஏ.எம். டீ அல்விஸ் | உ உறுப்பினா் |
| 7. | திரு. டி.டி.வை அபேவா்தன | உ உறுப்பினா் |
| 8. | செல்வி திமாலி டீ சில்வா | உ கண்காணிப்பாளா்/ திறைசேரியின் பிரதிநிதி |

**மீளாய்வு ஆண்டுக்காலப் பகுதியில் நில அளவைச் சபை உறுப்பினா்கள் வருமாறு:**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திரு. எஸ்.எம்.டபிள்ய‘. பா்னாந்து | உ தலைவா் | உ 03.02.2009 | உ 24.07.2013 |
| 2. | கலாநிதி கே. தவலிங்கம் | உ உபதலைவா் | உ 03.02.2009 | உ 24.07.2013 |
| 3. | கலாநிதி கே. தவலிங்கம் | உ தலைவா் | உ 25.07.2013 | உ மீளாய்வு ஆண்டுக் காலத்திற்குள் |
| 4. | திரு. கே.டபிள்ய‘.என்.டி. கருணாரத்ன | உ உபதலைவா் | உ 25.07.2013 | உ 02.12.2013 |
| 5. | திரு. நிஹால் குணவா்தன | உ உபதலைவா் | உ 03.12.2013 | உ மீளாய்வு ஆண்டுக் காலத்திற்குள் |
| 6. | திரு.. டபிள்ய‘.ஏ.எஸ்.விக்கிரமாராச்சி | உ உறுப்பினா் | உ 19.07.2011 | உ 24.07.2013 |
| 7. | திரு. எஸ்.டி.பி.ஜே தாம்பேகம | உ உறுப்பினா் | உ 25.07.2013 | உ மீளாய்வு ஆண்டுக் காலத்திற்குள் |
| 8. | கலாநிதி கே.ஆர்.எம்.யு. பண்டார | உ உறுப்பினா் | உ 01.01.2012 | உ மீளாய்வு ஆண்டுக் காலத்திற்குள் |
| 9. | திரு. திரு. சீ.டீ.எஸ். குணதிலக | உ உறுப்பினா் | உ 01.01.2012 | உ மீளாய்வு ஆண்டுக் காலத்திற்குள் |
| 10. | திரு. கே.ஏ.எம் டீ அல்விஸ் | உ உறுப்பினா் | உ 01.01.2012 | உ மீளாய்வு ஆண்டுக் காலத்திற்குள் |
| 11. | திரு. ஜெரால்ட் ஏ. டீ சில்வா | உ உறுப்பினா் | உ 01.01.2012 | உ 28.09.2013 |
| 12. | திரு. டி.டி.வை அபேவா்தன | உ உறுப்பினா் | உ 25.10.2013 | உ மீளாய்வு ஆண்டுக் காலத்திற்குள் |
| 13. | செல்வி திமாலி டீ சில்வா | உ திறைசேரியின் பிரதிநிதி | உ 27.09.2010 | உ மீளாய்வு ஆண்டுக் காலத்திற்குள் |

**நில அளவைச் சபையின் கூட்டங்களில் பங்குபற்றிய உறுப்பினா்களின் வருகை பின்வருமாறு காணப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. எஸ்.எம்.டபிள்ய‘. பா்னாந்து | உ தலைவா் | உ 11 கூட்டங்கள் |
| 2. | கலாநிதி கே. தவலிங்கம் | உ உபதலைவா் | உ 11 கூட்டங்கள் |
| 3. | கலாநிதி கே. தவலிங்கம் | உ தலைவா் | உ 05 கூட்டங்கள் |
| 4. | திரு. கே.டபிள்ய‘.என்.டி. கருணாரத்ன | உ உபதலைவா் | உ 04 கூட்டங்கள் |
| 5. | திரு. நிஹால் குணவா்தன | உ உபதலைவா் | உ 01 கூட்டங்கள் |
| 6. | திரு..டபிள்ய‘.ஏ.எஸ்.விக்கிரமாராச்சி | உ உறுப்பினர் | உ 10 கூட்டங்கள் |
| 7. | திரு. எஸ்.டி.பி.ஜே தாம்பேகம | உ உறுப்பினா் | உ 05 கூட்டங்கள் |
| 8. | கலாநிதி கே.ஆர்.எம்.யு. பண்டார | உ உறுப்பினா் | உ 16 கூட்டங்கள் |
| 9. | திரு. திரு. சீ.டீ.எஸ். குணதிலக | உ உறுப்பினா் | உ 14 கூட்டங்கள் |
| 10. | திரு. கே.ஏ.எம் டீ அல்விஸ் | உ உறுப்பினா் | உ 16 கூட்டங்கள் |
| 11. | திரு. ஜெரால்ட் ஏ. டீ சில்வா | உ உறுப்பினா் | உ 09 கூட்டங்கள் |
| 12. | திரு. டி.டி.வை அபேவா்தன | உ உறுப்பினா் | உ 00 கூட்டங்கள் |
| 13. | செல்வி திமாலி டீ சில்வா | உ திறைசேரியின் பிரதிநிதி | உ 13 கூட்டங்கள் |

## 06 நில அளவைச் சபை அலுவலகர்கள்

1. திரு. ஜி.டி.எஸ்.கே. குணரட்ன
   பதில் செயலாளர் — 01.01.2009 முதல் இன்று வரை

2 திரு. ரஞ்சித் மஹகும்புர
   கணக்காளர் (பகுதி நேர அடிப்படையில்) — 01.03.2008 முதல் இன்று வரை

3 செல்வி டபிள்ய‘.ஏ.எஸ். பிரியதர்சினி
   கணனிப் பிரயோக உதவியாளரும்,
   எழுதுநரும் — 24.05.2004 முதல் இன்று வரை

4. திரு. பி.சி லியனகே
   கணனிப் பிரயோக உதவியாளரும்,
   எழுதுநரும் — 16.03.2012 முதல் 28.02.2013 வரை

5. திருமதி நிலந்தி ரத்னாயக
   கணனிப் பிரயோக உதவியாளரும்,
   எழுதுநரும் — 18.03.2012 முதல் இன்று வரை

6 திரு. ரி.ஜி. பர்னாந்து
   அலுவலக சேவகர் — 15.07.2004 முதல் இன்று வரை

## 07 செயற்பாடுகள்

### பதிவு செய்தல்


மீளாய்வு ஆண்டுக் காலப்பகுதியில் 61 புதிய நில அளவையாளர்கள் பதிவு செய்துள்ளதுடன் 31.12.2013 இல் உள்ளவாறு பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களின் மொத்த எண்ணிக்கை 1975 ஆகக் காணப்பட்டது. இந்த நில அளவையாளர்களுக்கு பதிவுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளது.

### வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப் பத்திரம்

மீளாய்வு ஆண்டுக் காலப்பகுதியில் 1077 பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்கள் வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப் பத்திரத்தினைப் பெற்றுக்கொண்டார்கள். 2012 ஆம் ஆண்டில் கௌரவ காணி, காணி அபிவிருத்தி அமைச்சரின் அனுமதியுடன் அரசாங் நிலஅளவையாளர்களுக்கு வருடாந்த உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டது, பின்னர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட இடைநிறுத்தல் கட்டளையின் காரணமாக அரசாங்க நில அளவையாளர்களுக்கு வருடாந்த உத்தரவுப் பத்திரம் வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரங்களின் தொகை 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து குறைவடைந்து உள்ளது.

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை.

**2012, 2013 இல் வழங்கப்பட்ட மொத்த உத்தரவுப் பத்திரம்**




2013 ஜனவரி 31 ஆம் திகதி வரை வருடாந்த உத்தரவுப்பத்திரம் பெற்ற நில அளவையாளர்களின் முதலெழுத்துக்களுடனான பெயர்கள், பதிவு இலக்கங்கள், மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் அடங்கிய விபரங்கள் 2013 மார்ச்சு 28 ஆம் திகதிய 1804 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

உத்தரவுப் பத்திரம் பெற்ற சகல நில அளவையாளர்களினதும் பதிவு இலக்கங்கள், முதலெழுத்துக்களுடன் கூடிய பெயர்கள், முழுப் பெயர்கள், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் மாவட்டத்தின் பெயர், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், வருடாந்த உத்தரவுப்பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் உத்தரவுப்பத்திரம் காலவதியாகும் காலம் போன்ற தகவல்கள் உள்ளடங்கிய விபரங்கள் www.survey.gov.lk என்ற இணையத்தள முகவரியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இத்தகவல்கள் ஒவ்வொரு மூன்று மாத காலத்திற்கு ஒருமுறை நாளது வரைவுபடுத்தப்படும்..

## பொது மக்களுக்கான தகவல்

நிலஅளவைச் சபையினால் வழங்கப்படடு வரும் சேவையை அறிந்த பொது மக்கள் தொடர்ச்சியாகவும் மறைந்த அல்லது உயிருடன் இருக்கும் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும், மேலும் உத்தரவுப்பத்திரம் பெற்ற நில அளவையாளர்களினால் தயாரிக்கப்பட்ட சுமார் 100 வருடங்களுக்கும் மேல் பழைமைவாய்ந்த மூலக் காணி அளவைக் கிடைப்படங்களின் பிரதிகளை பெற்றுக்கொள்வதற்கும் நில அளவைச் சபையின் உதவியினை நாடிநிற்கின்றார்கள். இவ்வாறான தகவல்களை உடனடியாக வழங்கும் எண்ணத்துடன் சொந்த முகவரிகள், பதிவு இலக்கங்கள் மேலும் உத்தரவுப் பத்திர இலக்கங்கள் போன்ற தகவல்களை சேகரிப்பதற்கான ஒரு தரவுத்தளத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


2004 ஆம் ஆண்டிற்கு முன்னர் பதிவு செய்த உத்தரவுப் பத்திரம் பெற்ற நிலஅளவையாளர்களினால் தயாரிக்கப்பட்ட மூலக் கிடைப்படங்களின் பிரதிகளை பெற்றுக்கொள்வதற்கு உதவியாக அமையும் பொருட்டு அவர்களது தொடர்பு (தொலைபேசி) இலக்கங்களையும் தரவுத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளதுடள், இது பொதுமக்களுக்கு உரிய நபர்களை தொடர்புகொள்வதற்கு வழிவகுக்கும். ஆயினும், நில அளவைச் சபையானது இவ்வாறன சேவைகளையிட்டு ப'ரண திருப்தி கொள்ளவில்லை. ஏனெனில், இது பொதுமக்களுக்கு ஒழுங்கான முறையில் பழைமை வாய்ந்த

கிடைப்படங்களை பெற்றுக்கொள்வற்கு முழுமையாக உதவவில்லை. குறித்த மீளாய்வு ஆண்டுக் காலப் பகுதியில் இவ்வாறான 134 விசாரணைகள் காணப்பட்டன.

## நில அளவைச் சபையினால் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகள்.

தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை

2012, 2013 இல் தீர்க்கப்பட்ட முறைப்பாடுகள்




2013 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தொழில் புரியும் உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட தொழல்சார் முறைகேடுகள் தொடர்பாக மொத்தம் 56 முறைப்பாடுகள் பொது மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்றன. நில அளவைச் சபை 11 ஆரம்ப கட்ட விசாரணைகளை மேற்கொண்டதுடன், அவசியமான சந்தர்ப்பங்களின் போது இது தொடர்பாக நிலஅளவைச் சபையின் தீர்மானங்களுக்கு இணங்க முறையான விசாரணைகளை மேற்கொண்டது. குறித்த மீளாய்வு ஆண்டுக் காலப்பகுதியில் 25 முறையான விசாரணைகளை மேற்கொண்டது. 2013 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நில அளவைச் சபையினால் இவ்வாறான 50 முறைப்பாடுகளுக்கு தீர்வினை வழங்கக் கூடியதாக இருந்ததுடன், மேலும் இவ்வருட இறுதியில் 24 முறைப்பாடுகள் மாத்திரமே தீர்த்து வைக்கப்படாமல் நிலுவையாக இருந்தது.

எவ்வாறாயினும் சில முறைப்பாடுகளுக்கு 2012 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய நில அளவைச் சபையினால் தீர்வினை வழங்க முடியாது இருந்ததுடன், சில முறைப்பாடுகள் நீதிமன்ற கட்டளைப் பிரகாரம் கௌரவ நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையாளரினால் மேற்கொள்ளப்படும் அளவை தொடர்பானவையாக இருந்ததுடன், சில முறைப்பாடுகள் கௌரவ நீதிமன்றத்தினால் விசாரனை மேற்கொள்ளப்பட்டு வரும் வழக்கு தொடர்பானவையாக இருந்ததுடன், இன்னும் சில முறைப்பாடுகள் நிரூபிக்கத்தக்க சான்றுகள் இல்லாது இருந்ததுடன் முறையீட்டாளர்களுக்கு நிவாரணத்தை வழங்குவதற்கு நில அளவைச் சபையினால் முடியாது போனது.

நில அளவைச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட முறையான விசாரணைகளுக்கு ஏற்ப 05 பதிவு செய்யப்பட்ட நிலஅளவையாளர்கள் மாத்திரமே தொழில்சார் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது கண்டறியப்பட்டதுடன் அவை தொடர்பான தகவல்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு

| கோவை | பதிவு இலக்கம் | நில அளவையாளர்களின் முழுப் பெயர் | உத்தரவுப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ள காலம் |
|---|---|---|---|
| LSC/5/572 | 19920616 | பின்சா ஹேவகே மஹிந்து லால் பிரேமசந்திர | 2013-04-01 முதல் 2013-06-30 வரை |
| LSC/5/564 | 20040849 | சத்தம்பிரல்லகே டொன் ஜோசப் காமினி தயா அரசகுலரட்ன | 2013-06-01 முதல் 2014-05-31 வரை |
| LSC/5/591 | 19900996 | பெரும்படகே இந்திராணி மல்லிகா | 2013-09-01 முதல் 2013-11-30 வரை |
| LSC/5/534 | 19941060 | காலிதாச வைதா சாம்ராஜா கந்தநாதன் விக்னராஜா | 2013-09-01 முதல்2013-11-30 வரை |
| LSC/5/605 | 19830290 | துவான் நூர் சின்க லக்ஷான | 2014-01-01 முதல் 2014-12-31 வரை |

## 08 கல்வியும் பயிற்சியும்

### தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறிகள். (CPD)

நில அளவையில் முக்கியமானதொரு திருப்புமுனையாக தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறிகள் **(CPD)** திகழ்கின்றன. இதனை அவதானித்த நில அளவைச் சபையானது நிலஅளவையில் தொழில் நிபுணத்துவம் பெற்றவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பத்தினை தற்போதைய அபிவிருத்திக்கு நில அளவைக் களத்தில் பயன்படுத்துவது தொடர்பான பயிற்சிப் பாடநெறிகன் மற்றும் செயலமர்வுகளை பதிவு செய்யப்பட்ட உத்தரவுப்பத்திரம் பெற்ற நில அளவையாளர்கள் தொடர்வதற்கு ஆர்வமூட்டியது.

### இலங்கை நில அளவைத் திணைக்களம் மற்றும இலங்கை நிலஅளவையாளர் நிறுவனம் மற்றும் ஏனைய மாவட்ட உத்தரவுப் பத்திரம பெற்ற நிலஅளவையாளர் சம்மேளம் ஆகியவற்றால் நடாத்தப்பட்ட தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறி (CPD)

நிலஅளவைச் சபையின் வழிகாட்டலின் கீழ் தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறியினை **(CPD)** பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்கள், பதிவு செய்யப்பட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்கள் ஆகியோருக்கு நடாத்துவதற்கு இலங்கை நில அளவையாளர் நிறுவனம், நில அளவைத் திணைக்களம் மற்றும் மாவட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர் சம்மேளனம் (கம்பஹா / கண்டி) ஆகிய நான்கு (04) நிறுவனங்கள் காட்டிய அதிக ஆர்வத்தினை நில அளவைச் சபையானது திருப்தியுடன் சுட்டிக் காட்டுவதோடு அப் பயிற்சி நெறிகள் நில அளவைச் சபையால் தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறிகளாக **(CPD)** ஏற்கப்பட்டது.

### முதல் முறையாக உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொண்டவர்களுக்கான செயலமர்வு

நில அளவைச் சபை 28 ஜவூன் 2013 ஆம் ஆண்டு இன்னுமொரு செயலமர்வு ஒன்றினை ஆரம்பித்தது. இச்செயலமர்வு நிலஅளவைச் சபையின் ஆயுதமான வருடாந்த உத்தரவுப் பத்திரத்தினை முதன் முறையாகப் பெற்ற நிலஅளவையாளர்கள் நலன் கருதியும் தமது தொழிலை நில அளவைத்துறையில் திறம்பட முன்னெடுத்துச் செல்லும் பொருட்டும் ஆரம்பித்தது. அதிக அனுபவமிக்கவர்களும், உண்மையான திறமையுள்ள தேர்ச்சிமிக்க பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களில் இருந்து பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களுக்கு போதிப்பதற்காக தேர்ந்தேடுக்கப்பட்டுள்ளார்கள்.


**நடாத்தப்பட்ட தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறியின் சுருக்கம்.**

| | நிறுவனத்தின் பெயர் | தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு (CPD) பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 01 | இலங்கை நில அளவையாளர் நிறுவனம் | பொறியியல் மற்றும் நிர்மான அளவைகள், கூட்டாட்சி உரிமை அளவைகள் | 2013.02.22 |
| 02 | நில அளவைச் சபை **(LSC)** | தொழில் நுட்ப அமர்வுகள | 2013.03.06 |
| 03 | இலங்கை நில அளவையாளர் நிறுவனம் | கூட்டாட்சி உரிமை அளவைகள், ஒருங்கிணைத்தல் முறைமை மற்றும் உருமாற்றம் | 2013.03.03 |
| 04 | இலங்கை நில அளவைத் திணைக்களம் | செயலமர்வு | 2013.04.19 |
| 05 | கம்பஹா மாவட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் சம்மேளம் | கூட்டாட்சி உரிமைச் சட்டங்கள் மற்றும் அளவைத் தொழில் | 2013.05.21 |
| 06 | இலங்கை நில அளவையாளர் நிறுவனம் | காணி உரித்துப் பதிவு அளவைகள் மற்றும் பிம்சவிய வேலைத் திட்டத்தின் கீழ் பின் தொடர்ந்து வரும் அளவைகள் | 2043.06.07 |
| 07 | நில அளவைச் சபை **(LSC)** | ஆற்றுப்படுத்தும் பாடநெறி | 2013.06.28 |
| 08 | இலங்கை நில அளவையாளர் நிறுவனம் | தொழில் நிபுணத்துவமுடைய நிலஅளவையாளரே தேசிய அபிவிருத்தியின் முன்னோடி என்ற தொனிப்பொருளிலான தொழில்நுட்ப செயலமர்வு | 2013.08.02 |
| 09 | கண்டி மாவட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் சம்மேளம் | காணிச் சட்டங்களும் சொத்து மதிப்பீடும் | 2013.09.29 |
| 10 | நில அளவைச் சபை **(LSC)** | தொழில் நுட்ப அமர்வுகள | 2013.11.11 |
| 11 | நில அளவைச் சபை **(LSC)** | தொலைக் கல்வி **(DEP)** செயலமர்வு | 2013 ஆண்டு |

## 09 நிதி நடவடிக்கை பற்றிய மீளாய்வு

2012 – 2013 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான வருமானம்

மொத்தவருமானம் 2012 உ 2013




குறித்த ஆன்டுக் காலப்பகுதியில் நிலஅளவைச் சபையின் மொத்த வருமானம் முன்னைய வருடத்திற்கான வருமானம் ரூபா 4,660,100.00 உடன் ஒப்பிடும் போது ரூபா 4,583,594.00 தொகையிடப்பட்டுள்ளது. இதனை மேலே உள்ள வரைவு காட்டுகிறது. சென்ற வருடத்தில் அரசாங்க நில அளவையாளர்களுக்கான உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டதுடன் பின்னர் அதற்கு எதிராக உத்தரவுப்பத்திரம் பெற்ற நில அளவையாளர்களினால் கௌரவ நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் காரணமாக அந்த நடைமுறைக்கு கௌரவ நீதி மன்றத்தின் மூலம் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக முக்கியமாக 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டின் வருமான குறைவடைந்து காணப்படுகிறது.

குறித்த ஆண்டுக் காலப்பகுதியில் சபையின் செலவினம் ரூபா 3,532,281.00 குறைவாகப் பதிவாகி ரூபா 1,051,313.00 ஆகத் தொகையிடப்பட்டுள்ளது.

2010, 2011, மற்றும் 2012 ஆம் ஆண்டைப் போல் 2013 ஆம் ஆண்டும் திறைசேரியினால் எவ்விதமான நிதிகளும் வழங்கப்படவில்லை. மேலும் 2013 ஆம் ஆண்டில் மூலதனச் செலவினம் ரூபா 238,053.00 ஆக இருந்தது.

## 10. நிதிகளும் நிதி முகாமைத்துவம்

நில அளவைச் சபையின் வருமானம் பிரதானமாகப் பதிவு செய்யப்பட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நிலஅளவையாளர்களிடமிருந்து அவர்களுக்கான உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்காக பெறப்பட்ட கட்டணம், தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறிகள் **(CPD)** மற்றும் முறையான விசாரனைகளுக்கான செலவினம் தவறிழைத்த பதிவு செய்யப்பட்ட நிலஅளவையாளர்களிடம் இருந்து அறவிடப்பட்ட கட்டணம் என்பனவற்றினால் பெறப்பட்டது.

2013.12.31 இல் உள்ளவாறு ரூபா 9,824,461.00 தொகை இலங்கை வங்கியின் நிலையான வைப்புக்களில் உள்ளன.

**11**

## 2013 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள்

# காணி, காணி அபிவிருத்தி அமைச்சு
# நில அளவைச் சபை

## 31, டிசம்பர் 2013 இல் உள்ளவாறான
## நிதி நிலைமை அறிக்கை

| விபரங்கள் | குறிப்பு | 2013 | | 2012 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| காசும் காசுக்கு சமனானவையும் | 1 | 8,518,410 | | 7,789,377 | |
| கிடைக்கவேண்டியவை | 2 | 189,376 | | 101,363 | |
| இடர்கடன் | | 292,527 | | 395,051 | |
| விழா முற்பணம் | | 2,000 | 9,002,313 | 2,000 | 8,287,791 |
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | | | | |
| நிலையான வைப்பு | 3 | 1,325,249 | | 1,177,999 | |
| சாதனங்களும் உபகரணங்களும் | 4 | 523,610 | 1,848,859 | 412,861 | 1,590,860 |
| மொத்தச் சொத்துக்கள் | | | 10,851,172 | | 9,878,651 |
| **பொறுப்புகள்** | | | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| கிடைக்கப்பெற்ற உத்தரவுப்பத்திர முற்பணம் | | 2,481,275 | | 2,541,650 | |
| செலுத்தவேண்டியவை | | 248,000 | | 250,250 | |
| அட்டுறுச் செலவு | 5 | 279,536 | | 295,703 | 3,087,603 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவை** | | | - | | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | | 3,008,811 | | 3,087,603 |
| நிகர சொத்துகள் மதிப்பு | | | **7,842,361** | | **6,791,048** |
| - | | | | | |
| **நிகர சொத்துகள் / மூலதனம்** | | | | | |
| மூலதன பங்களிப்பு | | | | | |
| பொது திறைசேரி | | 1,043,030 | | 1,043,030 | |
| திரண்ட நிதி | | 5,748,018 | | 4,318,445 | |
| மிகையும் / குறையும் | | 1,051,313 | | 1,429,573 | |
| **மொத்த நிகர சொத்துகள் / மூலதனம** | | | **7,842,361** | | **6,791,048** |

எஸ்.எம்.பி.பி. சங்கக்கார
உபதலைவர்
நில அளவைச் சபை

பி.எம்..பி. உதயகாந்த
தலைவர்
நில அளவைச் சபை

## காணி, காணி அபிவிருத்தி அமைச்சு
## நில அளவைச் சபை

### 31, டிசம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டுக்கான
### நிதிச் செயல்திறன் அறிக்கை

| விபரங்கள் | குறிப்பு | 2013 | | 2012 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா. |
| **வருமானம்** | | | | | |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | | 2,636,150 | | 3,314,530 | |
| பதிவுக் கட்டணம் | | 272,500 | | 199,500 | |
| ஏனைய வருமானம் | 6 | 1,674,944 | | 1,146,070 | |
| மொத்த வருமானம் | | | 4,583,594 | | 4,660,100 |
| **செலவினங்கள்** | | | | | |
| **ஊழியர் சம்பளங்கள்** | | | | | |
| சம்பளங்களும் கூலிகளும் | 7 | 808,897 | | 802,122 | |
| மேலதிக நேரம், விடுமுறைக் கொடுப்பனவுகள் | | 11,092 | | - | |
| ஏனைய படிகள் | 8 | 1,065,266 | (1,885,255) | 1,003,329 | (1,805,451) |
| **பிரயாணச் செலவினங்கள்** | | | | | |
| உள்ளூர் பிரயாணம் | | | (6,372) | | (8,532) |
| **விநியோகங்கள்** | | | | | |
| காகிதாதிகளும் அலுவலக உபகரணங்களும் | | 102,656 | | 131,364 | |
| கூட்டங்களுக்கான தேநீர் உபசாரம் | | 51,830 | (154,486) | 41,119 | (172,483) |
| **பராமரிப்புச் செலவினங்கள்** | | | | | |
| இயந்திர சாதணங்களும் உபகரணங்களும் | | | (21,280 | | (9,500) |
| **சேவைகள்** | | | | | |
| தபாலும், தொடர்பாடலும் | | 127,957 | | 108,976 | |
| மின்சாரமும் தண்ணீரும் | 9 | 78,734 | | 78,734 | |
| ஏனையவைகள் | 10 | 1,130,893 | (1,337,584) | 956,818 | (1,144,528) |
| தேய்மானம் | | | (127,304) | | (90,033) |
| மொத்தச் செலவினங்கள் | | | (3,532,281) | | (3,230,527) |
| இக் காலத்திற்கான மிகையும் / குறையும் | | | **1,051,313** | | **1,429,573** |

எஸ்.எம்.பி.பி. சங்கக்கார
உபதலைவர்
நில அளவைச் சபை

பி.எம்..பி. உதயகாந்த
தலைவா
நில அளவைச் சபை

## காணி, காணி அபிவிருத்தி அமைச்சு
## நில அளவைச் சபை

### 31, டிசம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துகள் / மூலதன மாற்றங்களுக்கான கூற்று

| விபரம் | மூலதன அளிப்பு | திரண்ட நிதி மிகையும் / குறையும் | மொத்தம் |
|---|---|---|---|
| 31 டிசம்பர் 2012 இல் மீதி | 1,043,030 | 5,748,018 | 6,791,048 |
| காலத்திற்கான மிகையும் / (குறையும்) | | 1,051,313 | 1,051,313 |
| 31, டிசம்பர் 2013 இல் உள்ள மீதி | 1,043,030 | 6,799,331 | 7,842,361 |

எஸ்.எம்.பி.பி. சங்கக்கார
உபதலைவர்
நில அளவைச் சபை

பி.எம்..பி. உதயகாந்த
தலைவர்
நில அளவைச் சபை

## காணி, காணி அபிவிருத்தி அமைச்சு
## நில அளவைச் சபை

### 31, டிசம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டுக்கான
### காசுப் பாய்ச்சல் கூற்று

| விபரங்கள் | குறிப்பு | 2013 | | 2012 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சல்** | | | | | |
| மிகையும் (குறையும்) | | 1,051,313 | | 1,429,573 | |
| **காசு அல்லாத நடவடிக்கைகள்** | | | | | |
| தேய்மானம் | | 127,304 | | 90,033 | |
| நிலையான வைப்பு வட்டி | | (894,288) | | (732,907) | |
| இடர்க் கடன் கொடுப்பனவில் (அதிகரிப்பு) / குறைவு | | 102,524 | | (132,931) | |
| கிடைக்கவேண்டியவை (அதிகரிப்பு) / குறைவு | | (88,013) | | 65,154 | |
| செலுத்தவேண்டியவை (அதிகரிப்பு) / குறைவு | | (2,250) | | 46,250 | |
| முற்பணமாகக் கிடைக்கப்பெற்ற உத்தரவுப் பத்திரக் கட்டணத்தின் அதிகரிப்பு / (குறைவு) | | (60,375) | | | |
| அட்டுறுச் செலவீனங்கள் அதிகரிப்பு / (குறைவு) | | (16,167) | | (51,780) | |
| தொங்கல் கணக்கு அதிகரிப்பு / (குறைவு) | | | | 122,960 | |
| தேறிய செயற்பாட்டு நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சால் கூற்று | | | 220,048 | | 836,352 |
| **முதலீட்டு நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சல் கூற்று** | | | | | |
| நிலையான வைப்பு | | (147,250) | | 115,729 | |
| நிலையான வைப்பு வட்டி | | 894,288 | | 732,907 | |
| நிலையான சொத்துக் கொள்வனவு | | (238,053) | | (85,000) | |
| தேறிய முதலீட்டு நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சல் கூற்று | | | 508,985 | | 763,636 |
| **நிதியீட்ட நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சல் கூற்று** | | | | | |
| | | | | | (25,760) |
| காசு மற்றும் காசிற்கு சமமானவற்றின் நிகர அதிகரிப்பு | | 729,033 | | | 1,574,228 |
| ஆரம்ப தவனையில் காசு மற்றும் காசிற்கு சமமானவற்றின் அதிகரிப்பு | | 7,789,377 | | | 6,215,149 |
| இறுதித் தவனையில் காசு, காசிற்கு சமமானவற்றின் அதிகரிப்பு | | 8,518,410 | | | 7,789,377 |

| | |
|---|---|
| எஸ்.எம்.பி.பி. சங்கக்கார | பி.எம்..பி. உதயகாந்த |
| உபதலைவா் | தலைவா் |
| நில அளவைச் சபை | நில அளவைச் சபை |

31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்றிக்கைக் குறிப்புக்கள்.

## காணி, காணி அபிவிருத்தி அமைச்சு
## நில அளவைச் சபை

**1 காசு மற்றும் காசிற்கு சமமானவை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கையிருப்பில் உள்ள காசு | | | | 3,081 |
| | வங்கியில் உள்ள காசு | | | | 16,117 |
| **நிலையான வைப்பு** | | | | | |
| தொடர் இல. | வங்கி | காலம் | கணக்கு இல. | பெறுமதி | |
| 1 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 3 மாதம் | 7256887 | 2,000,000 | |
| 2 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 3 மாதம் | 70070797 | 2,064,001 | |
| 3 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 3 மாதம் | 74176142 | 1,635,211 | |
| 4 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 3 மாதம் | 75333664 | 1,000,000 | |
| 5 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 3 மாதம் | 75333588 | 500,000 | |
| 6 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 3 மாதம் | 75028364 | 700,000 | |
| 7 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 7 நாட்கள் | 75410060 | 300,000 | |
| 8 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 7 நாட்கள் | 75410146 | 300,000 | |
| | | | | | 8,499,212 |
| | | | | | 8,518,410 |

**2 கிடைக்க வேண்டியவை**

| | | |
|---|---|---|
| நிலையான வைப்பு வட்டி | 137,308 | |
| விதிக்கப்பட்ட கட்டணம் பி.சி. லியனகே | 22,068 | |
| இடைநிறுத்தப்பட்ட உத்தரவுப்பத்திரத்திற்காக விதிக்கப்பட்ட கட்டணம் | 30,000 | |
| | | 189,379 |

**3 நிலையான வைப்பு**

| தொடர் இல. | வங்கி | காலம் | கணக்கு இல. | பெறுமதி |
|---|---|---|---|---|
| 1 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 01 வருடம் | 71352120 | 1,325,249 |
| | | | | 1,325,249 |

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**
**நில அளவைச் சபை**

4. இயந்திர சாதனங்களும் உபகரணங்களும்

| பொருட்கள் | 01.01.2013 இல உள்ளவாறான மீதி ரூபா | இவ்வாண்டுக் காலப்பகுதியிலான கொள்வனவு ரூபா | மொத்தம் ரூபா | தேய்மானம் % | வருடாந்த தேய்மானம் ரூபா | 2013-12-31 இல் உள்ளவாறான தேறிய பெறுமதி |
|---|---|---|---|---|---|---|
| இயந்திர சாதனங்கள் | 129,449 | - | 129,449 | 20 | 25,890 | ***103,559*** |
| தளபாடங்கள் | 165,601 | - | 165,601 | 10 | 16,560 | ***149,041*** |
| கணனி | 106,839 | 127248 | 234,087 | 25 | 58,522 | ***175,565*** |
| அலுவலக உபகரணங்கள் | 10,972 | 28553 | 39,525 | 25 | 9,882 | ***29,643*** |
| நிலஅளவைச் சபை பெயர்ப்பலகை | - | 82252 | 82252 | 20 | 16450 | **65802** |
| **மொத்தம்** | **412,861** | **238,053** | **650,914** | | **127,304** | **523,610** |

**5 அட்டுறுச் செலவினங்கள்**

| தொடர் இல. | செலவினங்கள் | ரூபா |
|---|---|---|
| 1 | சம்பளங்களும் கூலிகளும் | 9,000 |
| 2 | சபை உறுப்பினர் படிகள் | 72,670 |
| 3 | தொலைபேசி | 3,516 |
| 4 | தொலைத்தொடர்பு மற்றும் தபால் கட்டணம் | 1,170 |
| 5 | மேலதிக நேரக் கொடுப்பணவு | 4,350 |
| 6 | கணக்காய்வுக் கட்டணம் | 190,000 |
| **மொதத்தம்** | | **279,536** |

**6 ஏனைய வருமானம்**

| | |
|---|---|
| தகவல் வழங்கல் | 23,800 |
| செயலமர்வு | 696,570 |
| நிலையான வைப்பு வட்டி | 889,739 |
| கடனுக்கான வட்டி | 12,767 |
| ஆர். சி லியனகே | 22,068 |
| இடைநிறுத்தப்பட்ட உத்தரவுப் பத்திரத்திற்கு விதிக்கப்பட்ட கட்டணம் | 30,000 |
| | **1,674,944** |

**7 சம்பளங்கள் மற்றும் கூலிகள்**

| | |
|---|---|
| சம்பளமும் கூலியும் | 670,897 |
| ஊ.நே.நிதி பங்களிப்பு | 110,400 |
| ஊ.ந.பொ.நிதி பங்களிப்பு | 27,600 |
| | **808,897** |

**8 ஏனைய படிகள்**

| | |
|---|---|
| வாழ்க்கைச் செலவுப் படிகள் | 233,981 |
| விசேட படிகள் | 102,374 |
| தலைவரின் படிகள் | 300,000 |
| உபதலைவரின் படிகள் | 244,516 |
| பதில் செயலாளரின் படிகள் | 115,590 |
| கணக்காளர் படிகள் | 68,805 |
| | **1,065,266** |

**வழங்கல்கள்**

**9 மின்சாரம் மற்றும் நீர்**

| | |
|---|---|
| மின்சாரம் | 74,534 |
| நீர் | 4,200 |
| | **78,734** |

**10 ஏனையவை**

| | |
|---|---|
| சபை உறுப்பினர்களின் படிகள் | 446,438 |
| கணக்காய்வு குழு உறுப்பினர் படிகள் | 112,000 |
| கணக்காய்வுக் கட்டணம் | 96,400 |
| விளம்பரங்கள் | 89,201 |
| நானாவிதங்கள் | 98,594 |
| பயிற்சிப் பட்டறைச் செலவினங்கள் | 266,510 |
| அலுவர்களுக்கான பயிற்சி | 21,750 |
| | **1,130,893** |

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**
**நில அளவைச் சபை**

## 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள்

### 01. பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள்

1.1 தயாரிப்பு முறை

நிதிக் கூற்றுகள் , இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் விதிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஆகியவற்றுக்கு அமைவாகத் தயாரிக்கப்படுகின்றன.

1.2 நிதிக் கூற்றுக்கள் அவை ஏற்பட்டதன் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

1.3 நிதிக் கூற்றுக்கள் மரபுரீதியான செலவின மரபொழுங்கு முறையின் கீழ் தயாரிக்கப்படுகின்றன.

### 02. சொத்துகள் அவற்றின் பெறுமதி அடிப்படையில்

2.1 நிலையான சொத்துகள் எழுதப்பட்ட பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2 தேய்மானம்

தேய்மானம் பின்வரும் வீதாசாரத்தில் குறைந்து செல்லும் மீதி முறையில் முன்னைய வருடங்களைப் போல் கணிப்பிடப்பட்டுள்ளது.

| சொத்துகளின் வகைகள் | வீதாசாரம் % |
|---|---|
| இயந்திர சாதனம் | 20 |
| தளபாடம் | 10 |
| கணனி | 25 |
| அலுவலக உபகரணங்கள் | 25 |
| பெயர்ப் பலகை | 20 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. ஏல்பீ/எவீ/எல்எஸ்சீ/01/13/05 ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2014 ஒக்டோபர் 15

LAND SURVEY COUNCIL 12 NOV 2014

தலைவர்,

நில அளவைச் சபை

**நில அளவைச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

நில அளவைச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவைச் சபை அதிகாரச்சட்டத்தின் 57(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2014 யூன் 09 ஆந் திகதி சபையின் 2013 தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளபடி நில அளவைச் சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசோட்டம் என்பவற்றை நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்று நான் அபிபபிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2012 ஆம் ஆண்டில் கடமைக்கு ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சேவையிலிருந்து நீங்கியிருந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 117,600 தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கூற்றின் படி, மீளாய்வாண்டின் சபையின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,051,313 தொகையான மிகையொன்று காணப்பட்டதுடன் இதனோடு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,429,573 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 378,260 தொகையான வீழ்ச்சியைக் காணக்கூடியதாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வருடாந்த அனுமதிப்பத்திர வருமானத்தில் ரூபா 678,380 தொகையான குறைவு இவ் வீழ்ச்சிக்கு நேரடியாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 செயலாற்றல்

---

2002 இன் 17 ஆம் இலக்க அளவைகள் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட கருமங்களை நிறைவேற்றுவதன் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கடந்த ஆண்டின் போது தீர்க்கப்பட இருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 88 ஆனதுடன் இதில் 70 அதாவது 80 சதவீதமானவை தீர்க்கப்பட்டிருந்த போதிலும் கடந்த ஆண்டின் போது தீர்க்கப்படாத முறைப்பாடுகளுடன் மீளாய்வாண்டின் தீர்க்கப்பட வேண்டியிருந்த 74 முறைப்பாடுகளில், 50 முறைப்பாடுகள் அதாவது 68 சதவீதம் மாத்திரமே தீர்க்கப்பட்டிருந்ததுடன் சில மாதங்களில் ஒரு முறைப்பாடும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நில அளவைத் தொழில்துறையை மேம்படுத்துவதற்காக தொழில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட மேம்படுத்தல் சபையின் பிரதான செயற்பாடாக உள்ளது. செயற்பாட்டுத் திட்டத்தின் படி, மீளாய்வாண்டின் போது 05 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 03 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், வேறு நிறுவனங்களின் மூலம் நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுடன் 11 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தமை செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. தொழிற் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 696,570 தொகை அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையாளர்களால் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 266,510 தொகையான அதாவது 38 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது பயன்படுத்தப்பட்ட தொகைகள் முறையே 49 சதவீதமாகவும் 41 சதவீதமாகவும் காணப்பட்டது. இதன் படி, இச் செயற்பாட்டை மேற்கொள்வது தொடர்பாக போதிய கவனம் கோரப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

**4.2 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

---

ரூபா 1.5 மில்லியன் பெறுமதியான 2 நிலையான வைப்புகள் முதிர்வடைய முன்னர் காசாக்கப்பட்டிருந்தமையால் சபையானது இதற்காகப் பெற வேண்டியிருந்த ரூபா 44,712 தொகையான வட்டித் தொகை கிடைக்கப்பெறாது போயிற்று.

**4.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

---

2008 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஓர் முறைப்பாடு 2014 மே 30 வரை 05 ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும் இதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

பின்வரும் விடயங்கள் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(அ) ஏனைய செலவினங்களுக்காக ரூபா 355,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான செலவினம் ரூபா 1,130,893 ஆனமையால் இது மதிப்பிடப்பட்ட செலவினத்தைப் பார்க்கிலும் 318 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) தொழிற்துறை அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 1,393 சதவீதம் உழைக்கப்பட்டிருந்ததுடன் பாதீட்டு மதிப்பீடு சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அடிப்படை நோக்கங்களிற்குப் பெறப்படும் அத்தகைய விடயங்கள் தொடர்பாக கவனம் ஈர்க்கப்பட்டு போதிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்தி தொடர்பான அவதானிப்புகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசி தாபன விதிக் கோவை II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு மற்றும் 2009 சனவரி 06 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஈ/35/4/391 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் படி, 2009 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் சபையின் செயலாளர் பதவியில் வெற்றிடம் நிலவுவதுடன் இதற்காக நிரந்தர அடிப்படையில் ஓர் உத்தியோகத்தர் சேர்க்கப்படும் வரை உரிய பதவிக்காக தகைமை பெற்றுள்ள ஓர் உத்தியோகத்தர் பதில் செயலாளராக நியமிக்கப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன் படி, சபைச் செயலாளர் பதவிக்காக அளவைத் திணைக்களத்தின் ஓர் உத்தியோகத்தர் பதில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் நிரந்தர செயலாளர் ஒருவரை நியமிக்குமாறு 2012 யூலை 05 ஆம் திகதி அரச முயற்சிகள் பற்றிய குழுவால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அப் பதவியை நிரப்புவதற்கு 2014 மே 30 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 5.3 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்பை நிறைவேற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையில் பதிவுசெய்யப்பட்டிருந்த நில அளவையாளர் ஒருவர் இரண்டு பெயர்களைப் பயன்படுத்தி வரைபட பிரதிகளைத் தயாரித்திருந்தமை தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டதுடன் இதன் காரணமாக வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த முறைப்பாடு நிராகரிக்கப்படுவதாகவும் அவ்வாறான வரைபடங்களின் சட்டரீதியான தன்மை தொடர்பில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவை அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவு மற்றும் நில அளவை சபையின் 2006 ஏப்ரல் 02 ஆம் திகதிய எல்எஸ்சீ/சீஜஆர்/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களால் ஏதேனும் ஒரு பகுதிக் காணியின் உரித்தை கையேற்பதற்காக அல்லது

ஏதேனும் ஓர் எல்லை மாற்றம் செய்வதற்காக தயாரிக்கப்படும் திட்ட வரைபடம் அல்லது வரைபின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் உரிய மாவட்ட நில அளவையாளர் காரியாலயத்தில் அத் திட்ட வரைபடம் உறுதிப்படுத்தப்படும் நாள் முதல் 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2014 மே 15 ஆம் திகதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) காசு கையாளலும் வங்கியிலிடலும்

(இ) முறைகேடுகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல்

ஒப்பம் : எச்.ஏ.எஸ் சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Ms/v*